18—

சுற்றுலாத் தலம்

***6829—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவில் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) நாகை மாவட்டம், சீர்காழி தொகுதிக்குட்பட்ட பகுதியில் வைத்தீஸ்வரன்கோவில் உள்ளது. நவக்கிரக ஸ்தலமான செவ்வாய்க்குரிய ஸ்தலமாக வைத்தீஸ்வரன்கோவில் கருதப்பட்டு வருகிறது. ஏற்கெனவே சுற்றுலாத் துறை சார்பாக ரூபாய் 6.50 இலட்சம் மதிப்பீட்டில் அருள்மிகு வைத்தீஸ்வரன் திருக்கோயில் பகுதியில் குளியலறை மற்றும் கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகள் செய்து முடிக்கப்பட்டு, சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டில் உள்ளது. மேலும், தற்போது அந்தக் கோயில் பகுதியிலே சுற்றுலாப் பயணிகள் மற்றும் ஆன்மிகப் பயணிகளின் வசதிக்காக அந்தக் கோயிலில் உள்ள குளத்தைச் சுற்றி தடுப்பு வேலிகள், ஒளி அமைப்பு வசதிகள், 28,800 சதுர அடி பரப்பளவில் பக்தர்கள் தங்கும் கூடம், ஓய்வறைகள், கழிப்பறைகள், குளியலறை வசதிகள், வாகனம் நிறுத்துமிடம் ஆகிய அடிப்படை வசதிகளை மேற்கொள்ள ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவித் திட்டத்தின்கீழ் 3 கோடியே 5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்ட மதிப்பீடும் பெறப்பட்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு விரைவாக அந்தப் பணிகளை எடுத்துச் செய்யும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவிப்பதோடு, கடந்த 2012–2013 ஆம் ஆண்டு நிதியொதுக்கீட்டிலே ஒன்பதாவது அறிவிப்பாக சீர்காழி பகுதியும் அந்த மெகா சுற்றுலாவிலே சேர்க்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 பிப்ரவரி 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

திருமதி ம. சக்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணை இமை காப்பது போல் தமிழக மக்களை அனுதினமும் காத்துவரும் தாயுள்ளம் கொண்ட தரணிபோற்றும் தங்கத்தாரகை தமிழக முதலமைச்சர், நான் அனுதினமும் வணங்குகின்ற கடவுள், என் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித பொற்பாதங்களை வணங்கி, சோழர் காலத்தில் புலவர்கள் பாடிய 'தீராத நோயும் தீர்க்கவல்லோன்' என்று பெயர் பெற்ற ஊர் வைத்தீஸ்வரன்கோவில். இக்கோயிலுக்கு தமிழக முதலமைச்சர், தமிழக மக்களின் பசிப்பிணி மருத்துவராக வாழும் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அனைத்து சுற்றுலாப் பயணிகளும் பயன்பெறும் வகையில், அடிப்படை வசதிகளை செய்து கொடுத்ததற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றியைக் காணிக்கையாக்கி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

19—

அடிப்படை வசதிகள்

***5356—திரு. அ. சவுந்தரராசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாநகரப் போக்குவரத்துக் கழக பேருந்து நிலையங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்யவும், பெண் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.

சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் 28 பேருந்து நிலையங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதில் 26 பேருந்து